2013 ஏப்ரல் 2]

மதிப்பீடு தயார் செய்து, ஆணையர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தந்திட பணிந்து கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், வருடத்திற்கு 1,006 கோயில்கள் வீதம் திருப்பணிகள் எல்லாம் செய்யப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோயிலில், விரைவாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு விரைவிலே அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

புதிய கட்டடம்

***6964—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 2

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகமானது, சீர்காழி நகரினுடைய மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், மேற்குறிப்பிட்ட அந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடமானது பழமையான கட்டடமாக இருந்தாலும், அரசின் நிதியுதவியோடு அவ்வப்போது புனரமைப்புப் பணிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காரணத்தினாலும், தற்போது அந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் நல்லமுறையிலே இயங்கி வருகின்ற காரணத்தினாலே, தற்போது பெரும் பொருட்செலவிலே இந்தக் கட்டடத்தை மீண்டும் புனரமைக்கக்கூடிய தேவையோ, புதிய கட்டடம் கட்டக்கூடிய வாய்ப்புகளோ எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘அம்மா’ திட்டம் என்ற அற்புதத் திட்டத்தை தமிழக மக்களுக்கு வருவாய்த் துறையின்மூலம் தந்து சரித்திரம் படைத்த சாதனைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரமும் வியக்கும் சரித்திரம் அம்மா நீங்கள்! வரலாறும் வணங்கும் வாழும் வரலாறாக எங்களுக்கு வாராது வந்துதித்த மாமணியே! தமிழக மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்திவரும் மக்கள் தலைவி, எல்லாம் வல்ல எங்களுடைய குடும்ப தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்

2013 ஏப்ரல் 2]

எண்ணற்ற பல திட்டங்களை வருவாய்த் துறையின் மூலமாகக் கொடுப்பதனால், எப்போதும் இல்லாத வகையில் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றார்கள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டதால், திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான இட வசதி இல்லாமலும், மேலும் கழிவறை மற்றும் மக்கள் அமர்வதற்கான இடம் போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத மிகவும் பழமைவாய்ந்த கட்டடமாக வட்டாட்சியர் அலுவலகம் இயங்கி வருகிறது. தமிழக மக்களுக்குக் கேட்காமலேயே அனைத்தையும் அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற அட்சயப் பாத்திரமாய், அற்புத ஆட்சி செய்து கொண்டிருக்கும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, சீர்காழி தனித் தொகுதி மக்களின் நலனைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்காழி நகரில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகமானது, கிளைச் சிறைச்சாலை, சார்–பதிவாளர் அலுவலகம், கருவூலம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களை ஒரே இடத்திலே உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பேருந்து நிலையத்தினுடைய அருகிலேயே அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், நகரினுடைய மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், பொது மக்கள் வந்து செல்வதற்கு மிகவும் வசதியான இடத்தில் அந்த வட்டாட்சியர் அலுவலகம் இன்றைக்கு இயங்கிக் கொண்டு வருகிறது.

முற்பகல் 11–10

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'மக்களுடைய அடிப்படைத் தேவைகளான கழிப்பறை, மக்கள் வந்து அமரக்கூடிய இடங்கள் போன்றவை போதுமானதாக இல்லை' என்று சொல்லியிருக்கின்றார்கள். தமிழகத்தினுடைய வரலாற்றிலே என்றும்

இல்லாத அளவிற்கு, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, மக்கள் அமருவதற்குண்டான இருக்கைகள், கழிப்பறைகள் அமைக்க வேண்டுமென்பதற்காகவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகவும், ஒவ்வொரு வட்ட அலுவலகத்திற்கும் Innovation Fund என்று சொல்லக்கூடிய 10 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அவ்வப்போது அரசின் மூலமாக நிதிகளைப் பெற்று, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; அந்த வட்டாட்சியர் அலுவலகம் தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

இன்னும் ஒரு ஒப்பீட்டை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் 5 ஆண்டு கால ஆட்சியில், ‘14 வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடங்கள் கட்டப்படும்’ என்று அறிவிக்கப்பட்டது; அறிவிக்கப்பட்ட 14 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களில், இரண்டே இரண்டு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே, இந்த இரண்டு வருட காலத்திற்குள், 9 புதிய வட்டாட்சியர் அலுவலகங்களைத் துவக்கி வைத்ததோடு மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எப்படி சிந்தித்து வேகமாகச் செயல்படுகிற அரசு என்பதற்கு அடையாளமாக, 9 வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் கட்டடம் கட்டுவதற்கு 2.2 கோடி ரூபாய் நிதியை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்குண்டான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சீர்காழி

2013 ஏப்ரல் 2]

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்ற ஆவலிலே இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தனித் தொகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அனுதினமும் வணங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதத்தைப் பணிந்து வணங்குகின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. ‘காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடுவது குறித்து மகாத்மா காந்தி அவர்களது கருத்து—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஓர் அறிக்கையினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் உள்ளாட்சித்*